DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 26 /2023

Deposition of LW6 examined as PW2 Dt. 04. 08. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | துரை | Caste | : | |
| Father's/Husband's Name | : | பத்துசாமி | Calling | : | |
| Village | : | தென்னலக்குடி | Religion | : | |
| Taluk | : | | Age | : | 60 /2023 |

(Accused present)

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன்.எனது அண்ணன மகன் வசந்தன் என்பர் இறந்துவிட்டார். கடந்த 28.07.2022ம் தேதி மூங்கில் தோட்டம் அருகில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார். மறுநாள் நானும், எனது நண்பர் ஆனந்தராஜ் என்பவரும் சம்பவ இடத்தை பார்ப்பதற்காக 5.20மணிக்கு சென்று இருந்தோம். அப்போது போலிசார் சம்ப இடத்திற்கு வந்து முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமான வழக்கினை விசாரணை விசாரிப்பதற்காக எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (சாட்சி தன்னுடைய சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள கையெழுத்திகளில் இரண்டாவதாக உள்ள கையெழுத்தினை தன்னுடைய கையெழுத்து என்று கூறுகிறார். ஆனால் அவருடைய கையெழுத்து முதலாவதாக துரை என்று கையெழுத்துஇடப்பட்டுள்ளதால் அவரின் கையெழுத்தானது குறியீடு செய்யப்படவில்லை.) என்னுடன் ஆனந்தராஜ் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பகுதி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான்.எனது அண்ணன மகன் வசந்தன் என்பர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கடந்த 28.07.2022ம் தேதி மூங்கில் தோட்டம் அருகில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மறுநாள் நானும், எனது நண்பர் ஆனந்தராஜ் என்பவரும் சம்பவ இடத்தை பார்ப்பதற்காக 5.20மணிக்கு சென்று இருந்தோம் என்றால் சரிதான். அப்போது போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமான வழக்கினை விசாரணை விசாரிப்பதற்காக எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். நான்

பார்வை மகசரில் செய்துள்ள  சாட்சி கையெழுத்துகளில் இரண்டாவதாக செய்துள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல.  மேற்படி சம்பவத்தை பற்றி  போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு அந்த கையெழுத்தினை மட்டும் மாற்றி எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 26 /2023

Deposition of LW1 examined as PW1 Dt. 04. 08. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலசந்தர் | Caste | : | |
| Father's/Husband's Name | : | மகேந்திரன் | Calling | : | |
| Village | : | ஆறுபாதி | Religion | : | |
| Taluk | : | | Age | : | 35 /2023 |

(Accused present)

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வெளிநாட்டில் வேலை செய்து தற்சமயம் ஊருக்கு வந்துள்ளேன். வசந்தன் என்பவருக்கு 28.07.2022 ம் தேதி காலை 6.00 மணியளவில் அவருக்கு பிரசர் அதிகமாக இருந்ததால் கட்டபிள்ளை என்பர் அவரை அழைத்து கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். எனக்கு வசந்தன் 10.30 மணிக்கு போன் செய்து என்னை மருத்துவமனைக்கு வருமாறு அழைத்தார். நான் எனது இருசக்கர வாகனத்தில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்தேன். மருத்துவமனையில் சிகிச்சைக்கு பின்னர் வசந்தனை அழைத்து கொண்டு கட்டபிள்ளை தன்னுடைய இருசக்கர வாகனத்தில் வந்தார். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் தனியாக வந்தேன்.

2. தர்மபுரம் ஆதினம் பேருந்து நிறுத்தம் அருகில் வந்தேபாது வசந்தன் எங்களிடம் நான் இருசக்கர வாகனத்தில் வெயில் அதிகமாக இருப்பதால் அதில் வரவில்லை. நான் பேருந்தில் வருவதாக கூறினார். நாங்கள் சிறுநீர் கழிப்பதற்காக ஓரமாக சென்றோம் வசந்தன் ரோடு கிராஸ் செய்யும்போது லாரி ஒன்று வேகமாகவும், ஹாரான் அடிக்காமலும் வந்து வசந்தனை இடித்து 10 அடி துாரம் இழுத்து சென்றது. 108 ஆம்புலன்ஸ் போன் செய்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். மருத்துவமனைக்கு கொண்டு சென்றவுடன் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்க்ள அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். இந்த விபத்தினை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரி தான் வண்டி நம்பர் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவினை நான் தான் போலிசாரிடம் மருத்துவமனையில் அவர்கள் விசாரித்தபோது கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்த நபர் உங்கள் வாகனத்தில் வரவில்லை என்றால் சரிதான். வாகனத்தில் இருந்து எங்கு இறங்கினார் எதற்காக இறங்கினார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் வண்டியில் எங்கு சென்று கொண்டிருந்தீர்கள் என்றால் ஆறுபாதிக்கு சென்று கொண்டிருந்தேன். ஆறுபாதிக்கு செல்லும்போது தகவல் கிடைத்தா என்றால இல்லை இரண்டு வண்டியிலும் சென்று

கொண்டிருந்தோம். அந்த வண்டி எங்கு சென்று கொண்டிருந்தது என்றால் தர்மபுரம் காலேஜ் பக்கத்தில் சென்று கொண்டிருந்தோம். இற்நத நபரை எந்த இடத்தில் இறக்கிவிட்டார் என்றால் இறந்த நபர் பஸ்சில் செல்லவேண்டும் என்று சொன்னதால் அவரை தர்மபுரம் காலேஜ் வாசலில் இருந்து 100 மீ தூரம் தள்ளி இறக்கிவிட்டார். ஐயனார் கோயில் என்பது ஏவிசி காலேஜ் தாண்டி உள்ளது என்றால் அங்கேயும் ஒரு கோவில் உள்ளது அதை தாண்டியும் 200 மீ தாண்டி ஒரு கோவில் உள்ளது.

2. இறந்த நபர் பேருந்தில் செல்வதாக கூறியுள்ளார் அவரை பஸ் ஸ்ாண்டில் இறக்கிவிடவில்லை என்றால் சரிதான். உடல்நிலை சரியில்லை பேருந்தில் செல்வதாக கூறியவரை சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் முன்னும் பின்னும் 100 மீ அளவில் பஸ் ஸ்ாண்டி உள்ள நிலையில் அங்கு அவரை இறக்கிவிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அந்த வாகனத்தில் அவர் வந்து இருந்தால் அவர் பேருந்தில் செல்வதாக கூறியவரை பஸ் ஸ்ாண்டில் இறக்கிவிட்டு இருக்கலாம் என்றால் சரிதான். இந்த விபத்து ரோட்டை குறுக்கே கடந்து செல்லும்போது ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. நீங்கள் சென்று பார்க்கும்போது அவர் அடிப்பட்டு கிடந்தார் என்றால் நான் அங்கு தான் இருந்தேன். நீங்கள் சொல்வது போல் இறந்தநபரை வண்டியில் அழைத்து வரவில்லை அவர் உடல்நிலை சரியில்லை பேருந்தில் செல்வதாக கூறிஇருந்தால் அவரை பஸ் ஸ்ாண்டில் இறக்கிவிட்டு பஸ் ஏற்றிவிட்டு துணைக்கு யாராவது சென்று இருப்பீர்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக எதுவும் உங்களுக்கு தெரியாது இறந்த நபர் நிற்கும்போது லாரி வருவதை பார்த்து கொண்டு தன்னிச்சையாக ரோட்டில் கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரயில்ல. புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் என் உடன் வந்தவர் எழுதினார். அதில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும் நான் தான் சொன்னேன்.

4. உங்களுக்கு எழுதபடிக்க தெரியும் ஆனால் நீஙகள் எழுதவில்லை என்றால் எனக்கு எழுதுவதில் பிழை வரும் அதனால் எழுதவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் என்னவென்றால் தர்மபுரம் காலேஜ் அருகே சற்று தள்ளி ஒரு கோவில் உள்ளது அந்த கோவிலின் பெயர் தெரியவில்லை இடத்தின் பெயர் தெரியவில்லை அந்த கோவிலின் அருகே 10 அடி தூரத்தல் சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறை கடைகள் வீடுகள் உள்ளது என்றால் அங்கு கடைகள் , வீடுகள் கிடையாது. வாகனத்தின் எந்த பாகம் இறந்தவரின் மீது மோதியது என்றால் வண்டியின் முன்பக்க முகப்பு விளக்கு அவர்மீது மோதியது. இறந்தவர் அடிப்பட்டு எங்கே கிடந்தார் என்றால் ரோட்டின் நடுப்பகுதியில்.

5. நீங்கள் சொல்வது போல் எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கரதையாவோ வாகனத்தை ஓட்டி வரவில்லை இறந்த நபர் தான் அவருடைய உடல்நிலை சுகவீணத்தின் காரணமாக தன் உயிரை மாயித்துகொள்ள ரோட்டின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை விபத்திற்கு மூமு காரணம் இறந்த நபர் தான் என்றால் சரியல்ல.